## மார்ச் – 10 – தவக்கால 01ம் ஞாயிறு

### "ஆண்டவர் எங்கள் குரலைக் கேட்டார்" இ.சட் 26:7

### முதல் வாசகம் : இ.ணைச்சட்டம் 26 : 4 – 10

மோசே மக்களை நோக்கிக் கூறியது : முதற்பலன் நிறைந்தஅந்தக் கூடையை உன் கையிலிருந்து எடுத்து, அதை உன் கடவுளாகிய ஆண்டவரது பலிபீடத்தின்முன் வைப்பார்.நீ உன் கடவுளாகிய ஆண்டவர் முன்னிலையில் அறிக்கையிட்டுக் கூறவேண்டியது "நிரந்தரக் குடியற்ற அரமேயரான என் தந்தை எகிப்து நாட்டுக்கு இறங்கிச் சென்றார். அங்கு மக்கள் சிலருடன் அன்னியராய் இருந்தார். ஆனால் அங்கேயே பெரிய, வலிமைமிகு, திரளான மக்களினத்தைக் கொண்டவர் ஆனார்.எகிப்தியர் எங்களை ஒடுக்கினார் துன்புறுத்தினர் கடினமான அடிமை வேலைகளை எங்கள்மீது சுமத்தினர்.அப்போது நாங்கள் எங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவரை நோக்கிக் குரல் எழுப்பினோம். ஆண்டவர் எங்கள் குரலைக் கேட்டார். எங்களுடைய துன்பத்தையும் வருத்தத்தையும் அவதியையும் கண்டார்.தம் வலிய கரத்தாலும், ஓங்கிய புயத்தாலும், அஞ்சத்தக்க பேராற்றலாலும், அடையாளங்களாலும், அருஞ்செயல்களாலும் ஆண்டவர் எங்களை எகிப்திலிருந்து புறப்படச் செய்தார்.அவர் எங்களை இந்த இடத்திற்குக் கூட்டிவந்தார். பாலும் தேனும் வழிந்தோடும் இந்த நாட்டை எங்களுக்குத் தந்தார்.எனவே ஆண்டவரே, இதோ, நீர் எனக்குக் கொடுத்த நிலத்தின் முதற்பலனைக் கொண்டு வந்துள்ளேன்" என்று சொல்லி, அதை உன் கடவுளாகிய ஆண்டவர் முன்னிலையில் வைத்து, அவரைப் பணிந்து தொழுவாய்.

**பதில்பாடல் :** துன்ப வேளையில் என்னோடு இருந்தருளும் ஆண்டவரே.

### இரண்டாம் வாசகம் : உரோமையர் : 10 : 8 – 13

சகோதரர் சகோதரிகளே! சொல்லியிருப்பது இதுவே "வார்த்தை உனக்கு மிக அருகில் உள்ளது உன் வாயில், உன் இதயத்தில் உள்ளது. "இதுவே நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் என நாங்கள் பறைசாற்றும் செய்தியாகும்.ஏனெனில், "இயேசு ஆண்டவர்" என வாயார அறிக்கையிட்டு, இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என நீங்கள் உள்ளூசூ0128ர நம்பினால் மீட்புப் பெறுவீர்கள். இவ்வாறு உள்ளூசூ0128ர நம்புவோர் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவர் வாயார அறிக்கையிடுவோர் மீட்புப் பெறுவர். ஏனெனில், "அவர் மீது நம்பிக்கை கொண்டோர் வெட்கத்திற்கு உள்ளாக மாட்டார்" என்பது மறை நூல் கூற்று. இதில் யூதர் என்றோ கிரேக்கர் என்றோ வேறுபாடில்லை அனைவருக்கும் ஆண்டவர் ஒருவரே. அவரை நோக்கி மன்றாடும் யாவருக்கும் அவர் அளவற்ற நலன்களைப் பொழிகிறார். "ஆண்டவரின் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகிறவர் எவரும் மீட்புப் பெறுவர்" என்று எழுதியுள்ளது அல்லவா?

### நற்செய்தி : லூக்கா 4 : 1 - 13

அக்காலத்தில், இயேசு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு யோர்தான் ஆற்றை விட்டுத் திரும்பினார். பின்னர் அவர் அதே ஆவியால் பாலைநிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் நாற்பது நாள் அலகையினால் சோதிக்கப்பட்டார். அந்நாள்களில் அவர் ஒன்றும் சாப்பிடவில்லை. அதன் பின் அவர் பசியுற்றார். அப்பொழுது அலகை அவரிடம் , "நீர் இறைமகன் என்றால் இந்தக் கல் அப்பமாகும்படி கட்டளையிடும்" என்றது. அதனிடம் இயேசு மறுமொழியாக, "மனிதர் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை" என மறைநூலில் எழுதியுள்ளதே" என்றார். பின்பு அலகை அவரை அழைத்துச் சென்று உலகத்தின் அரசுகள் அனைத்தையும் ஒரு நொடிப்பொழுதில் அவருக்குக் காட்டி, அவரிடம், "இவற்றின்மேல் முழு அதிகாரத்தையும் இவற்றின் மேன்மையையும் உமக்குக் கொடுப்பேன். இவை யாவும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன் நான் விரும்பியவருக்கு இவற்றைக் கொடுப்பேன். நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையவையாகும்" என்றது. இயேசு அதனிடம் மறுமொழியாக, ""உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக" என்று மறைநூலில் எழுதியுள்ளது" என்றார். பின்னர் அது அவரை எருசலேமுக்கு அழைத்துச் சென்று கோவிலின் உயர்ந்த பகுதியில் அவரை நிறுத்தி, "நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து கீழே குதியும் "உம்மைப் பாதுகாக்கும்படி கடவுள் தம் தூதருக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்" என்றும் , "உமது கால் கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளால் உம்மைத் தாங்கிக்கொள்வார்கள்" என்றும் மறைநூலில் எழுதியுள்ளது" என்றது. இயேசு அதனிடம் மறுமொழியாக, ""உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம்" என்றும் சொல்லியுள்ளதே" என்றார். அலகை சோதனைகள் அனைத்தையும் முடித்தபின்பு ஏற்ற காலம் வரும்வரை அவரைவிட்டு அகன்றது.

**தியானம்:** இன்றைய உலகில் வாழும் மக்கள் பல்வேறுவகையான போராட்டங்க்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். விஞ்ஞான வளர்ச்சி ஒருபுறம், தொழில் நுட்ப வளர்ச்சி மறுபுறம். இதன் மத்தியில் பெயர் தெரியாத பலவிதமான நோய்கள் வயது வேறுபாடின்றி மக்களை தாக்குகின்றது. மருந்து கண்டறியப்படாமல், மருத்துவர்களினால் காப்பாற்றப்பட முடியாமல் இறக்கின்ற மக்கள், இயற்கையின் சீற்றம் என்று பல வழிகளில் மக்கள் துன்பப்படுகின்றார்கள். இங்கே வசிக்க முடியாமல் வேறு கிரகங்களில் வாழமுடியுமா என்ற ஆராட்சி. அங்கு சுற்றுலா செல்ல நினைக்கும் பணவசதி படைத்தவர்கள். இவைகளுக்கு மத்தியில் நமது விசுவாச வாழ்வு ஊசலாடுகின்றது. முதல் வாசகத்தில் பார்த்ததுபோல் எகிப்தியரின் அடிமைத்தனத்தில் இருந்து இஸ்ராயேல் மக்களை மீட்டு பாலும் தேனும் பொழியும் கானான் தேசத்திற்கு அழைத்து வந்ததுபோல் எம்மையும் இங்கே கூட்டி வந்திருக்கின்றார். அண்மையில் எடுக்கப் பட்ட கருத்துக் கணிப்பில் உலகில் மக்கள் வாழ தகுதியுள்ள நாடுகளின் பட்டியலில் கனடா முதல் இடம் பிடித்திருக்கின்றது. அவ்வளவு வசதியான நாட்டில் நாம் நிம்மதியாக வாழ்கின்றோமா? பிரச்சனைகள் என்று எதுவும் இல்லையா? நற்செய்தியில் யேசுவையே சாத்தான் சோதிக்கின்றான். கடவுளின் மகனை சோதிக்க அவனுக்கு முடியும் என்றால் பலவீனர்களாகிய நாம் எம்மாத்திரம்? யேசுவிற்கு சோதனை உணவு வடிவில், உலக நாட்ட வடிவில், பதவி ஆசை வடிவில் வந்தது. நமக்கும் இதேவகையான சோதனைகள் வருவதில்லையா? அப்போது நாம் என்ன செய்கின்றோம்? போலியான உறவுகள் வடிவில், பண ஆசை வடிவில், சாத்தானின் சோதனைகள் எம் வாழ்விற்குள் நுழைகின்றன. இவற்றில் இருந்து எம்மால் விடுபட முடிகின்றதா? எனவே தவக்காலத்தை ஆரம்பித்துள்ள நாம் இம்மாதிரியான சாத்தானின் செயல்களுக்கு இடம் கொடுக்காமல் சாத்தானே அப்பாலே போ என்று விரட்டுகின்ற வல்லமையை பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.